# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 210/மா/2017

ஆணை எண். 55/2018

நாள் : 16/03/2018

டாக்டர் ஜி. மோகன் மற்றும் நால்வர்
சென்னை – 600 092. – முறையீட்டு மனுதாரர்கள்

உதவி ஆணையர்,
மண்டலம் – 10,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, சின்மயா நகர், காளியம்மன் கோயில் தெரு, E 1- 212, K.V.S. டவர் முகவரியில் வசிக்கும் டாக்டர் G. மோகன் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் நால்வர் கூட்டாக தாக்கல் செய்த முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.11.2017 அன்று பெறப்பட்டு 210/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீடு சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பத்தாவது மண்டல உதவி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, விருகம்பாக்கம், சின்மயா நகர், காளியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் டாக்டர் G. மோகன் மற்றும் நால்வர் கூட்டாக சமர்ப்பித்துள்ள தங்களது முறையீட்டு மனுவில், காளியம்மன் கோயில் தெருவினை விரிவாக்கம் செய்வதற்காக அத்தெருவுக்கு அருகில் உள்ள தங்களுக்குச் சொந்தமான நிலங்களை தானமாக வழங்கக் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 10 உதவி ஆணையரிடமிருந்து கடிதம் பெறப்பட்டதைத் தொடர்ந்து அதிர்ச்சி அடைந்ததாகவும் எனவே தானமாக வழங்கக் கோரும் கோரிக்கையினை கைவிடக்கோரியும் மாற்றாக உரிய இழப்பீடு வழங்கிய பின் நிலங்களை கையகப்படுத்தக்கோருமாறும் முறையிடப்பட்டுள்ளது. தானமாக நிலங்களை வழங்கக்கோரும் அறிவிக்கைக் கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சியின் 10–வது மண்டல உதவி ஆணையரே மனுதாரர்களுக்கு அனுப்பியுள்ளார்.

2. சென்னை மாநகராட்சி, பத்தாவது மண்டல உதவி ஆணையர் அவர்களிடம் இது சம்பந்தமாக அறிக்கை பெறப்பபட்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் இரண்டாவது திட்ட அறிக்கையின்படி, மேற்குறிப்பிட்ட விருகம்பாக்கம் காளியம்மன் கோவில் தெருவினை விரிவாக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டதின் அடிப்படையில் அச்சாலையினை தற்போது உள்ள சராசரி 9.6 மீட்டர் சாலை அகலத்தினை சராசரி 24/27 மீட்டர் அகலத்திற்கு விரிவாக்கம் செய்ய 01.09.2017 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.349–இல் கொள்கை ரீதியிலான அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசு ஆணையினைத் தொடர்ந்தே, சென்னை மாநகராட்சி பத்தாவது மண்டல உதவி ஆணையர் சம்பந்தப்பட்ட நில உடமைதாரர்களிடமிருந்து நிலத்தைத் தானமாகப் பெறுவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (a)- இன் படி அரசால் ஆணையிடப்பட்டிருக்கின்ற பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து, முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டினை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 16–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

(முத்திரை: தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. டாக்டர் G. மோகன்,
   E 1- 212, K.V.S. டவர்,
   காளியம்மன் கோயில் தெரு,
   சின்மயா நகர்,
   சென்னை – 600 092.

2. உதவி ஆணையர்,
   மண்டலம் – 10,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.117, N.S.K. சாலை,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்